**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.74/2016**

2025—ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.1 விஜயகுமார், வயது 56, த/பெ அண்ணாமலை**

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சொத்தானது சேவூரில் கிராமத்தில் உள்ள அருள்மிகு ராதா ருக்குமணி சமேத வேணுகோபால கிருஷ்ணசாமி திருக்கோயிலுக்கு சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் உள்ள முழு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 20.11.2015 அன்று பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஆன அறக்கட்டளை எதன் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் முதலில் நான் உறுப்பினராக இருந்தேன். பிறகு அது அறக்கட்டளையாக மாறி விட்டது. அறக்கட்டளை ஆரம்பிக்க பொது கூட்டம் கூட்டி யார் யார் தலைவர், செயலாளர் என்று முடிவெடுத்துதான் அறக்கட்டளை ஆரம்பிக்கப்படும் என்றால் சரிதான்.

2. இந்த அறக்கட்டளையில் மொத்தம் எத்தனை பேர் பொதுக்குழு உறுப்பினராக உள்ளனர் என்றால் தெரியவில்லை. மேற்படி அறக்கட்டளை துவங்க பொதுக்குழு கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற்றுவார்கள். மேற்படி தீர்மானத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அறக்கட்டளையை எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் 2015ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. தேதி, மாதம் எனக்கு தற்போது தெரியவில்லை. அறக்கட்டளை எதற்காக துவக்கப்பட்டது, மேற்படி அறக்கட்டளையின் விதிகளை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.

3. அறக்கட்டளை விதிகளின் படி மாதம் ஒருமுறை பொதுக்கூட்டம் நடத்தப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி தொடர்ச்சியாக பொதுக்கூட்டம் நடைபெறும் போது அனைத்து உறுப்பினர்களும் அதில் கையெழுத்து செய்ய வேண்டும், அந்த தீர்மான புத்தகத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அறக்கட்டளை விதிகளின் படி ஒவ்வொரு வருடமும் அதன் பதிவை புதுப்பிக்க வேண்டும், அதுப்போல் புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1. 2015 ஆன வருடம். தற்போது வரை அது புதுப்பிக்கப்படவில்லை. மேற்படி அறக்கட்டளை விதிகளின் படி பதிவை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நான் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

4. எதற்காக பி.வா.சா.ஆ.2 திருத்தல் பத்திரம் பதியப்பட்டது என்றால் சுவாமி என்பதற்கு பதிலாக சாமி என்று பெயர் தவறாக குறிப்பிடப்பட்டிருந்ததால் திருத்தல் பத்திரம் பதியப்பட்டது. சாட்சி தன்னிச்சையாக எழுத்து பிழைகளை மாற்றதான் திருத்தல் பத்திரம் பதியப்பட்டது. மேற்படி எழுத்து

பிழையை சரி செய்ய பொதுக்குழு கூட்டம் கூட்டி தீர்மானம் நிறைவேற்றி அதன் பின்னர் பிழை திருத்த பத்திரம் பதியப்பட்டதற்கான தீர்மான புத்தகத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் பொதுக்கூட்டம் கூட்டி வாய் மொழியாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5. பி.வா.சா.ஆ.1. ஆவணம் 20.11.2015 அன்று போடுவதற்கு முன்பே வாதியானவர் வா.சா.ஆ.1 ஆவணத்தை 14.10.2015 அன்று பதிவு செய்து விட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்த விவரம் தெரிந்து நான் 1 மாதம் கழித்து பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்தேன் என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் அறக்கட்டளையை ஆரம்பிக்க தீர்மானம் செய்தோம். அதில் வாதி பாஸ்கரனும் இருந்தார். பிறகு பாஸ்கரன் என்பவர் 4 நபர்களை அவருடன் சேர்த்து கொண்டு தனியாக அறக்கட்டளையை ஆரம்பித்து விட்டார். அதன் பின்னிட்டு அவர் ஆரம்பித்த அறக்கட்டளை வா.சா.ஆ.1 ஏற்புடையது அல்ல என்று நாங்கள் அனைவரும் தீர்மானித்து பி.வா.சா.ஆ.1.ஐ பதிவு செய்தோம்.

6. மேற்படி சம்பவம் தொடர்ச்சியாக தீர்மானம் போடப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 30.11.2015 தேதியிட்ட பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணப்படி இந்திராகாந்தி என்பவர் பிரதிவாதி 1 ஜெயராமன் என்பவருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ற்கு பிறகுதான் பி.வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் பி.வா.சா.ஆ.1 சொத்தானது அறக்கட்டளை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மின் இணைப்புகளில் வாதி பாஸ்கரன் பெயரில்தான் அனைத்து ஆவணங்களும் உள்ளது என்றால் சரிதான்.

7. பி.வா.சா.ஆ.13 முதல் பி.வா.சா.ஆ.15 வரை உள்ள ஆவணங்கள் கோவிலுக்கான கணக்கு விவரம் எந்த தணிக்கையாளரால் (Auditor)' போடப்பட்டது என்றால் பெயர் தெரியாது. 2015 வருடம் தாவா கோவிலுக்கான கணக்கு விவரங்கள் போடப்பட்டது. பிறகு 2015ற்கு பிறகு போடப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் சீட்டு கணக்கு என்பது எதை குறிக்கிறது என்றால் நாங்கள் முதலில் சீட்டு நடத்தினோம், அதில் வந்த தொகையைதான் அறக்கட்டளைக்கு கொடுத்தோம். சாட்சி பிறகு நாங்கள் சீட்டு நடத்தவில்லை. சீட்டு நடத்தியவர்கள் எங்களுக்கு நன்கொடையாக கொடுத்தார்கள்.

8. பி.வா.சா.ஆ.13 முதல் பி.வா.சா.ஆ.15 வரை உள்ள ஆவணங்கள் அனைத்தும் சீட்டு நடத்திதான் நன்கொடையாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13ல் ஷெட்யூல் 3ல் உள்ள சீட்டு தொகை ரூபாய் 44,100/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், பி.வா.சா.ஆ.14 ல் ஷெட்யூல் 1ல் உள்ள சீட்டு தொகை ரூபாய் 6800/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், பி.வா.சா.ஆ.15 ல் உள்ள சீட்டு தொகை ரூபாய் 21430/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ல் காவல் நிலையத்திற்கு ரூபாய் 2,230/- என குறிப்பிடப்பட்டுள்ளது எதற்கு என்றால் காவல் நிலையம் சென்ற போது வந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் சாப்பாடு செலவு செய்ததாகும்.

9. வாதி பாஸ்கரன் கோயிலுக்குள் சீட்டு நடத்துவதை ஆட்சேபணை செய்ததால் போலிசார் துணையோடு நாங்கள் வாதியின் மீது பொய்யான புகார் அளித்து வாதியை துன்புறுத்தினோம் என்றால் சரியல்ல.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- Miss.D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court,
Arni.